**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 20** **நாள்: 23.03.2026**

**தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் – 2026னை முன்னிட்டு, சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வாக்குச்சாவடி அலுவலர்களை முதல் சுழற்சி (1st Randomizations) முறையில் தேர்வு செய்யும் பணி இன்று நடைபெற்றது.**

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் – 2026 அட்டவணை இந்திய தேர்தல் ஆணையத்தால் 15.03.2026 அன்று வெளியிடப்பட்ட நிலையில், சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் 978 வாக்குச்சாவடி மையங்களில், 4079 வாக்குச்சாவடிகளுக்கான தேர்தல் அலுவலர்களுக்காக 17 பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு உரிய பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளது. வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதல் சுழற்சி முறை தேர்வு (1st Randomizations) மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (23.03.2026) ரிப்பன் கட்டட கூட்டரங்கில் நடைபெற்றது.

மேலும், தேர்தல் பணியில் ஈடுபடும் சுமார் 19,594 வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு (Presiding Officer, Polling Officer-1, Polling Officer-2 and Polling Officer-3) மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (Training Electronic Voting Machine), தபால் ஓட்டிற்கான (Postal Ballot) படிவம் குறித்த விளக்கங்கள் மற்றும் வாக்குப்பதிவு நாளன்று வாக்குச்சாவடிகளில் பணிபுரிவதற்குத் தேவையான பயிற்சிகள் வழங்கிடும் விதமாக, முதற்கட்ட பயிற்சி 28.03.2026 அன்று அளிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**